# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNISED JOURNAL

UGC NO : 42330

ஜனவரி – 2019

4



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

17. தமிழ் இலக்கியங்களில் அறவியல் - 44
*முனைவர் இரா.சுமதி

18. சிறுபாணாற்றுப்படையில் அறவியலும் அழகியலும் - 47
*பா.மோகன்

19. ஔவையார் காட்டும் அறநெறி - 50
*முனைவர் க.ச.பவானி

20. திருக்குறளும் திருமந்திரமும் - 53
*முனைவர் ம.கீதா

21. ஹைக்கூ கவிதைகளில் அழகியல் - 56
*முனைவர் ந.இரமாபிரபா

22. சித்தர் (திருமூலர்) அறிவுறுத்தும் மாமலங்கள் - 60
*திருமதி மா.மஞ்சுளா

23. பதிற்றுப்பத்தில் மன்னர் அறம் - 63
*முனைவர் க.முத்துஇலக்குமி

24. சங்க இலக்கியம் காட்டும் அறம் - 66
*முனைவர் பா.அருள் ஜோதி

25. தமிழ் இலக்கியங்களில் அறவியல் - 70
*முனைவர் இ.அந்தோணியம்மாள்

26. சிறுவர் இலக்கியத்தின் அழகும் அறமும் - 73
*முனைவர் மா.தமிழ்ச்செல்வி

27. மனிதநேயம் - 77
*முனைவர் ச.பிரியதர்சினி

28. தமிழ் - பிராமியின் கட்டுதல் - 80
*சோ.முகுந்தன்

29. அப்பூதியடிகளாரின் அறம் - 84
*சாந்தகுமார்.செ

30. முகிலை இராசபாண்டியனின் படைப்புக்களில் நாஞ்சில் வட்டார வழக்குச் சொற்களும், வாழ்வியலும் - 87
*கோ.கலைச்செல்வி

31. MORALITY ELEMENTS IN TAMIL LITERATURE - 89
*T. ADALARASU

# பதிற்றுப்பத்தில் மன்னர் அறம்

*முனைவர் க.முத்துஇலக்குமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை & ஆய்வுமையம், அரசினர்கல்லூரி, சித்தூர்.

சங்க இலக்கியங்களில் சேரமன்னர்கள் பற்றி பாடப்பட்டது பதிற்றுப்பத்து. இது புறப்பொருள் பற்றியது. இந்நூலில் சேர மன்னர்களின் வீரம் , கொடை , அன்பு ,அரசியல் நேர்மை போன்ற பண்புகள் போற்றப்படுகின்றன. பதிற்றுப்பத்தின் இரண்டாம்பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்கண்ணனார் பாடியது. இப்பாடற்குப் பரிசிலாக உம்பற்காடு என்னும் பகுதியைச் சேர்ந்த ஐந்நூறு ஊர்களை பிரமதேயமாகக் கொடுத்ததோடு தென்னாட்டு வருமானத்தில் ஒருபகுதியை முப்பத்து எட்டு ஆண்டுகள் வரையிலும் கொடுத்ததாகப் பதிகச் செய்தி கூறுகின்றது. மேலும் இமயம் வரை படை எடுத்துச்சென்று வெற்றி வாகைசூடிய நெடுஞ்சேரலாதன் நாடு காவலனாக ஒரு அரசன் எவ்வாறு விளங்கவேண்டும் என்பதற்குச் சான்றாக விளங்கினான் என்பதைப் பாயிரம் விளக்குகின்றது.

பகைவரை அழிக்கும் ஆற்றலும் புறங்கொடா வீரமும் நாடுபுரக்கும் நற்பாண்மையும் பகைவர்க்கும் அருளும் அன்பும் வாரி வழங்கும் வள்ளல் தன்மையும் நல்அரசனின் அறமாகக்கருதப்பட்டதை இப்பாயிரச்செய்யுள் உணர்த்துகின்றது. நெடுஞ்சேரலாதனின் இத்தகு அறப்பண்புகளைப் பதிவு செய்வதாகவே இக்கருத்துரை அமைகின்றது.

நாடுபுரத்தல்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன்நாட்டு மக்களின் நலனுக்காக நாட்டிலுள்ள பயனற்ற காடுகளை அழித்து வாழிடமாக வளப்படுத்தினான். அதனால் மக்கள் அங்கு வாழ்ந்து, தம்வழிபடு தெய்வங்களுக்கு கோயில்களும் அமைத்தனர். ஆறலைக் கள்வர்களின் அச்சமின்றி மக்கள் அங்கு நடமாடினர். இதனை

காடேகடவுள்மேனபுறவே
ஒள்ளிழைமகளிரொடுமள்ளர்மேன (பா.13 ,21-22 )

என்றும் சேரலாதனின்ஆட்சியில்பசியும்பிணியும்நீங்கிநாடுபொழிவுபெற்றிருந்ததை

மழைவேண்டுபுலத்துமாரிநிற்ப
நோயொடுபசிஇகந்துஒரீஇ,
பூத்தன்றுபெருமநீகாத்தநாடே (பா.13 ,26-28 )

என்றும் பாடுகின்றார் புலவர் .நாடு புரத்தலில் வளமும் நலமும் மட்டுமன்றி காவலும் அடிப்படைக் கூறாக அமைகின்றது. பகைமன்னர் நெருங்காதவாறு தம்மக்களைக்காத்தலும் அரசனின் கடனாம். சேரலாதனின் ஆட்சியில் அமைந்திருந்த பாதுகாப்பு அரணானது பகை மன்னர் மலையொடு மாறுபட்டுத் தோன்றுமாறு அமைத்த புறமதில்களையும் பகைவரால் சுற்றி வளைக்கப்பட்ட காலத்தும் தேவையான உணவுப்பொருட்களை விளைவித்துக் கொள்வதற்கு ஏதுவாக வயலும் குளமும் உள்ளதும் அம்புக்காட்டுள் பொருத்தப்பட்ட மலை போன்ற இடைமதில்களும் மதில்களின் பின்புறத்தே கணைய மரங்கள் நெருங்கி ஐயவியாகியதுலா மரம் காவலாகத் தொங்க விடப்பட்டிருப்பதுமாகிய அகமதில் கொண்டதுமாகும். இவ்அரண் பற்றிப் பேசுகின்றது ஒரு பாடல்(பா.16) நாட்டுமக்களைக்காப்பதில் தலைசிறந்தவனான நீபொறுமையிலும் ஒப்பற்றவன். பெருங்குற்றம் செய்தபகைவராயினும் தனைப்பணிந்தால் அவர்களை ஏற்றுக்கொள்ளும் பெருந்தன்மையன், பகைவர்க்கும்

அருளும் பண்பிணன் என்பதை,

பெரியதப்புநர்ஆயினும்பகைவர்
பணிந்துதிறைபகரக்கொள்ளுநை (பா.17,2-3 )

என்ற பாடலடிகளால் அறியலாம். திறை செலுத்தும் பகை மன்னர் மட்டுமன்றி பாதுகாப்பின்றி பலதிசைகளில் தவிக்கும் பிறநாட்டுமக்களையும் பேணும் தன்மையனாகவும் சேரலாதன் விளங்கினான் என்பது மக்களைக்காக்கும் நல்லரசனின் பண்பிற்கு சான்றாகின்றது. இதனைப் பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550


UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNISED JOURNAL

UGC NO : 42330

ஜனவரி – 2019

4



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# பொருளடக்கம்


1. தமிழ் இலக்கியங்களில் அழகியல்
*கவிமாமணி திருவைபாபு - 1

2. இமையம் புதினத்தில் 'கோவேறு கழுதைகள்' அறிவுறுத்தும் வண்ணார் இன மேன்மைக்கான அறச்சிந்தனைகள்
*சி.குமுதா - 4

3. ஆனந்தபோதினியில் அற இலக்கியச் சிந்தனைகள்
*இரா.ஆனந்தஜோதி - 7

4. அற இலக்கியங்களில் கல்வியியல் சிந்தனை
*முனைவர் சு.வேலாயுதன் - 10

5. பாவண்ணன் சிறுகதைகளில் அறச் சிந்தனைகள்
*மு.சாதிக் அலி - 13

6. சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஆடற்கலை
*முனைவர் த.தர்மராஜன் - 15

7. மா.நடராசனின் புனைகதைகளில் வேளாண் மக்களின் வாழ்வியல் அறம்
*கோ.கலைவாணி - 18

8. சங்க இலக்கியத்தில் பழந்தமிழரின் கலை அழகு
*திருமதி பொ.நளினி - 20

9. கம்பராமாயணத்தில் கற்பு நெறி
*எஸ்.கலைமகள் - 23

10. இரு புராணங்களில் நாற் பொருட்கள்
*முனைவர் ந.காயத்ரி - 26

11. புறநானூற்றில் வாழ்வியல் அறம்
*முனைவர் சு.பரணி - 29

12. லட்சுமணன் சிறுகதைகளில் அழகியல்
*முனைவர் த.கவிதா - 31

13. புறநானூறு காட்டும் நட்பு
*முனைவர் பொ.ராணி - 34

14. அறவியல் நோக்கில் சங்க இலக்கியம்
*முனைவர் க.சிவமணி - 36

15. புனலும் மணலும் புதினத்தில் அழகியல்
*சு.பாத்திமா - 39

16. அறிவியல் நோக்கில் புறநானூறும் பரிபாடலும்
*முனைவர் பா.நளினிப்ரியா - 42

# அறவியல் நோக்கில் சங்க இலக்கியம்

*முனைவர் க.சிவமணி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை & ஆய்வு மையம், அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு.

நீதி போதனையுமாகவும் இல்லாமல் இன்பமூட்டுவதை மட்டுமே குறிக்கோளாகவும் கொள்ளாமல் இரண்டையும் சேர்த்துத் தருவன சங்க இலக்கியங்கள். அறம் என்பதற்கு அகராதிகள் பல்வேறு பொருள்களைக் குறிப்பிடினும் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் உடலாலும் மனத்தாலும் தீங்கு நேராத வண்ணம் வாழ்வை நகர்த்திச் செல்லும் வழிமுறையைக் கற்றுக் கொடுப்பவற்றை அறங்கள் எனலாம். இந்த அறங்களைத் தனிமனிதனுக்கு சமூகத்திற்கு அரசனுக்கு நாட்டிற்கு என்று வகைப்படுத்தினும் சமூகம் சமநிலையில் தத்தமது அன்றாடப் பணிகளை மேற்கொள்ளத் துணையாக அறங்களைக் கொள்ளுதல் மரபு. அவ்வல்கையில் சங்க இலக்கியங்களில் காணலாகும் அறக் கருத்துக்கள் பலவற்றுள் ஒருசோறு பதமாகச் சிலவற்றைக் கோட்டிட்டுக் காட்ட விழைகிறேன்.

**எது அறம்?**

அறம் என்பதற்கு வாழ்நாள் முழுதும் அனைவருக்கும் பொதுவான நலமளிக்கும் செயல்களில் தம்மைத் தொடர்ந்து ஈடுபடுத்திக்கொண்டிருத்தல் எனப் பொருள் கொள்ளலாம்.

நாம் ஈட்டும் பொருளும் அப்பொருளினால் உண்டாகும் இன்பமும் அறச் செயல்களை செய்வதால் உண்டானதாக இருத்தல் வேண்டும் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னால் அமையும் என்பதை

**சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்**

**அறத்து வழிப்படூஉம் ..............................** (புறம் 31.1-20)

என்ற அடிகளில் எடுத்துரைத்து அறம் செய்தலின் அவசியத்தை வலியுறுத்துகிறார். மேலும் குறுங்கோழியூர் கிழாரின் பாடல் சேர மன்னனது செங்கோல் அறம் நிலைத்தது என்பதை

**அறந்துஞ்சும் செங்கோலையே** (புறம்.20.17)

என்ற அடிகளில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**அற உணர்வு**

நாட்டில் அறம் மேலோங்கியிருக்காவிட்டால் எந்த விதமான நன்மையும் உலக மக்களுக்கு விளையப் போவதில்லை என்பதை எடுத்துரைக்கிறது கீழ்க்காணும் கலித்தொகைப் பாடல்

**சிறுகுடியீரே! சிறுகுடியீரே!**

**வள்ளிகீழ் வீழா; வரைமிசைத் தேன் தொடா;**

**கொல்லை குரல்வாங்கி ஈனா; மலை வாழ்நர்**

**அல்ல புரிந்தொழுகலான்** (கலி. 36.22.3)

என்ற அடிகளில் அற வழியில் செயல்படாத நாட்டில் எந்தவிதமான நன்மைகளும் விளையப்போவதில்லை. மலைவாழ் மக்கள் அறமல்லாத காரியங்களைச் செய்தால் தினைகள், கிழங்குகள் விளையாது தேன் கூடுகள் கட்டாது என்பதைச் சுட்டிக்காட்டி அறத்தின் தேவையை எடுத்துரைக்கிறார் புலவர்.

**அறம் செய்தலின் முறைமை**

அறச் செயல்களைச் செய்யும் போது வரும் பலன்களை எண்ணிப் பாராமல் செய்தலே சிறந்தது. ஒருமுறை அறம் செய்தால் இப் பிறவியிலோ இனி வரும் பிறவிகளிலோ அதற்கான பலன் நம்மை வந்தடையும் என்னும் நினைப்பில் செய்யும் செயல்கள் அறமாகா. மன்னன் ஆய் என்பவனின் சிறப்பைக் கூறவந்த புலவர்

ISSN 2454-3993

JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

▪ மலர் 3 ▪ சிறப்பிதழ் 1 ▪ பிப்ரவரி, 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

SHANLAX #SINCE1990



நாள்: 1.02.2019 இடம்: திருவள்ளுவர் கல்லூரி, தமிழ்த்துறை, பாபநாசம்

திருவள்ளுவர் கல்லூரி – தமிழ்த்துறை – பாபநாசம்
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி – தமிழ்த்துறை – குற்றாலம்
ராணி அண்ணா மகளிர் கல்லூரி – தமிழ்த்துறை – திருநெல்வேலி
ஸ்ரீ. எஸ். ஆர். என். எம். கல்லூரி – தமிழ்த்துறை – சாத்தூர்
பிரபா இலக்கியப் பதிப்பகம் – சங்கரன்கோவில்

இணைந்து நடத்தும் மாபெரும்

## பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கம்
## (International Tamil Conference)

தொகுதி - I

ஆய்வுப்பொருள்

## தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் தொன்மைகளும் புதுமைகளும்

UGC Approved Journal Number: 40729
VOLUME 3 | SPECIAL ISSUE 1 | FEBRUARY 2019
**Shanlax International Journal of Tamil Studies**
A Peer-reviewed- Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

43 ஆசாரக்கோவை காட்டும் வாழ்வியல் கூறுகள் 159
**த. மெர்லின்**

44 தமிழ் இலக்கியங்களில் தொன்மங்களும் புதுமைகளும் 163
**முனைவர் சி. தேவி**

45 பழந்தமிழரின் வேளாண் நுட்பம் 166
**முனைவர் கு. செல்வாஈஸ்வரி**

46 உலகம் பரவிய தமிழரின் ஆதி வழிபாடு 171
**முனைவர் சு. சதாசிவம்**

47 சிலப்பதிகாரத்தில் உணவின் உண்மைகள் 176
**முனைவர் அ. வசந்தி**

48 இன்றைய கல்விச் சூழலில் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் அறங்கள் 180
**முனைவர் ஹு. அல்தாஜ் பேகம்**

49 சங்க இலக்கியத்தில் போர் அரண்களின் தொன்மைகள் 183
**த. விஜி**

50 "அகாலம்" புதினத்தில் அறிவியல் புதுமைகள் 186
**சு. பாத்திமா**

# ‘அகாலம்’ புதினத்தில் அறிவியல் புதுமைகள்

சு. பாத்திமா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை & ஆய்வு மையம்
அரசுக்கல்லூரி, சித்தூர், பாலக்காடு, கேரளா

காலமெனும் ஆழியிலும் காற்று மழை ஊழியிலும் கரைந்தோ மறைந்தோ போய்விடாமல் காலத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு நிலைபேற்று தன்மையைப் பெறக்கூடிய வலிமை இலக்கியங்களுக்கு உண்டு. தமிழ் இலக்கிய உலகில் பல வகைமைகளைக் கொண்டு செழிப்புற்றிருக்கும் இவ்விலக்கியங்களை இன்பியல் இலக்கியம், அறிவியல் இலக்கியம் என இரண்டாகப் பகுத்துக் காணலாகும். இன்பியல் இலக்கியங்கள் கற்போர் உள்ளத்துக்கு இன்பம் பயக்கும் நூல்களாகவும் அறிவியல் இலக்கியம் கற்போருக்கு அறிவை முதன்மையாகத் தரும் இலக்கியங்களாகவும் திகழ்கின்றன. தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை இன்பியல் இலக்கியங்களே. அறிவியல் இலக்கியப்படைப்புகள் மிக அரிதாகவே கிடைக்கின்றன. இலக்கியம் இலக்கியத்துக்காக என்பதை விட இலக்கியம் மக்களின் பயன்பாட்டுக்காக என்பதே அறிவியல் தமிழின் ஒரு முக்கிய விழுமியமாகக் கொண்டுள்ளது. அவ்வகையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ‘அகாலம்’ எனும் அறிவியல் புதினத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அப்புதினத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறிவியல் புதுமைகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்காகும்.

அறிவியல் வளர்ச்சியின் சாதனைகள் அனைத்துத் துறைகளிலும் எல்லாத் தளங்களிலும் தடம் பதித்துள்ளன. கலை இலக்கியத்தையும் அது விட்டு வைக்கவில்லை. கலை இலக்கியத்தையும் அறிவியலையும் எதிர் நிலையில் வைத்துப் பார்த்த காலம் போயிற்று. இன்று இரண்டும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையாகத் திகழ்கின்றன. அறிவியல், கலை உருவாக்கத்திற்கான கருவிகளை உருவாக்கித் தந்ததோடன்றி அதுவே பாடுபொருளாகவும் உள்ளடக்கமாகவும் அமைந்து வருவதனைக் காண முடிகின்றது. இதுவே அறிவியல் புனைக்கதை (Science Fiction) எனும் வகையாகப் பரிணமித்து இலக்கிய உலகில் வலம் வருகின்றது. தமிழில் இவ்வகை முயற்சிகள் குறைவாகக் காணப்பட்டாலும் மொழிபெயர்ப்பு நூல்களின் வாயிலாக அவ்விடத்தை நிரப்பும் முயற்சி நடை பெற்று வருகிறது. மலையாள மொழியில் எழுத்தாளர் ஹபீசி எழுதிய ‘அசமயம்’ எனும் புதினத்தைப் பேராசிரியர் சு.பாத்திமா “அகாலம்” என்று தமிழில் மொழிபெயர்த்துள்ள புதினம் இதற்குச் சான்றாக அமைகின்றது.

இப்புதினம் காலந்தோறும் உலகில் மாறிவரும் பண்பாட்டு மாற்றங்களை உணர்த்துவதோடு அறிவியல் தொழில் நுட்பத்துறையின் சாதனைகளின் வளர்ச்சியையும் மனித மனதின் மானுட விழுமியங்களின் வீழ்ச்சியையும் எடுத்துரைக்கிறது. இதில் மானுட விழுமியங்களின் இடத்தை இயந்திர விழுமியங்கள் இடம் பிடித்துக் கொண்டுள்ளது. எங்கும் அறிவியல். எதிலும் அதன் ஆட்சி. மனிதன் அங்கு அதனை இயக்கும் இயந்திரமாக மாறுகிறான் எனும் புதுமைகளைப் புகுத்திப் புனையப்பட்டுள்ளது. இது இக்கால இலக்கியப் போக்குகளில் ஒன்றாகும்.

"அறிவியலில் பல துறைகளும் பல கோட்பாடுகளும் வழக்கத்தில் உள்ளன. இலக்கியத்தைப் புரிந்து கொள்வதற்கு இவை துணைபோகின்றன. அவை பரிணாமக் கோட்பாடு (Evolution Theory), உறுப்பியல் கோட்பாடு (Organic Theory), கணக்கோட்பாடு (Set Theory), நவீன தகவலியல் கோட்பாடு (Communication Theory), சைபர் நோடிக்ஸ் (Cyphernotics) முதலிய அறிவியல் கோட்பாடுகள் திறனாய்வுக்கு உதவக்கூடியதாகும்”

என்று தி.சு.நடராசன் தமது திறனாய்வுக் கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும் எனும் நூலில் பதிவு செய்துள்ளார்.

Research Paper-13

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNISED JOURNAL

UGC NO : 42330

ஜனவரி - 2019

4



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# லட்சுமணன் சிறுகதைகளில் அழகியல்

*முனைவர் த.கவிதா, தமிழ் உதவிப்பேராசிரியர், அரசுக்கல்லூரி, சித்தூர், பாலக்காடு. 678104.

மனிதனின் சிந்தனைத் திறன் வளர்வதற்கு அவனது அழகுணர்ச்சி அடித்தளமிடுகின்றது. இயற்கை எழிலைக் கண்டுணர்ந்து மகிழும் மனித மனம் அதன்வழி சில புரிதல்களையும் அறிதிறன்களையும் அடைகின்றது. இயற்கையைக் கூர்ந்து நோக்கி அனுபவிக்கும் திறன் படைத்த மனிதனால் இயற்கை கற்றுத் தரும் பாடங்களையும் உணர்ந்தறிய முடியும். அதனால் அவன் படைக்கும் படைப்புகளில் கலையழகுடன் இடம்பெறும் இயற்கைக் காட்சிகள் இலைமறை காயாக சில வாழ்வியல் உண்மைகளையும் புலப்படுத்துகின்றன. அதன் பயனாக படைப்பு என்பது இன்புறுத்தல், அறிவுறுத்தல் ஆகிய இரு ஆற்றல்களையும் தகவமைத்துக் கொண்டதாக விளங்குவது கண்கூடு.

"கற்பனை நயமும், எடுத்துரைக்கும் முறையில் அமையும் கலையழகும் இணைந்து இயங்கு கின்ற பொழுது படைப்பிலக்கியம் சிறந்த கலையழகைப் பெறுகின்றது. ஒரு நல்ல கருத்தை ஆதாரமாகக் கொண்டு கலையழகுடன் இலக்கியம் அமையும்போது வற்றாத இன்ப ஊற்றாய், படிப்பவரை மகிழ்விக்கவும் செய்கின்றது. ஒரு கலைப்படைப்பில் பதிக்கப்பட்டுள்ள அழகியல்புகளைக் கண்டறிந்து , அவை எவ்வாறு அப்படைப்பின் சிறப்பிற்குக் காரணமாகின்றன என்பதை அறிவதே அழகியல் திறனாய்வு முறையாகும். (கு.பகவதி (ப.ஆ) , திறனாய்வு அணுகு முறைகள் – பக் 30) என்பதன் வாயிலாக ஒரு படைப்பினை அழகியல் நோக்குடன் காண்பது எவ்வாறு என்பது புலனாகின்றது. அழகியல் என்பது இன்பியலாகவோ துன்பியலாகவோ அமையலாம் என்று அறிஞர்கள் கருதுவதுண்டு.

"பொண்ணும் முத்தா இருக்கணும் வேலையும் பத்தா இருக்கணும்" என்னும் பழமொழிக் கேற்ப அழகியல் கூறுகள் படைப்புகளில் இடம்பெற்று தன் பணியை செவ்வனே நிறைவேற்று கின்றன. சிலநேரங்களில் ஒரு முன்னோக்கு உத்தி போல அமைந்து வாசகனுக்கு ஒரு எச்சரிக்கை உணர்வையும் ஏற்படுத்துகின்றன. அவ்வகையில் கோவை வட்டாரப் படைப்பாளராகிய லட்சுமணன் எழுதிய "சப்பெ கொகாலு" என்னும் இருளர்களின் இன வரைவியல் சிறுகதைப் தொகுப்பில் அழகியலானது சிறப்புற இடம்பெற்று மலைவாழ் மக்களின் வாழ்வியல் முறைகளை செவ்வனே படம்பிடித்துக்காட்டுகின்றது.

**ஏந்து புள்ளெ**

"சப்பெ கொகாலு" என்ற கதைத் தொகுப்பில் இடம்பெறும் "ஏந்து புள்ளெ" என்னும் கதையில் ஆத்திப் பறவைகளின் வாழ்வியல் முறைகளை 'கதைசொல்லி' காட்சிப் படுத்தும்போது இருளர்களின் மகப்பேறுகாலப் பக்குவங்கள் பாங்காக வெளிப்படுகின்றன. "மத்திமரத்திலிருந்த பொண்டாந்தி தனது நீண்ட அலகில் , உள்ளுக்குள்ளிருந்த கழிவையும் மெழுகையும் களிமண்ணையும் குழைத்து, குடியிருந்த பொந்தைப் பூசிப் பூசி தன்னால் முடிந்த அளவுக்கு அடைத்துக் கொண்டிருந்தது. வெளியே கிளையில் உட்கார்ந்திருந்த ஆணாத்தி , பாசம் ததும்பும் விழிகளோடும் ஏக்கத்தோடும் அதையே பார்த்துக் கொண்டிருந்தது.

இனிப் பொண்டு , வெளியில் போக முடியாது. அதன் சிறகுகளைக் கொத்திக் கோதிக் கொடுக்க ஆணும் உள்ளே வரமுடியாது. அது தன் அலகை நீட்டும் அளவுக்கு விட்டிருக்கும் துவாரத்தின் வழியே , இச்சிப்பழமோ, இளுப்பைத் தோலோ, புழுவோ பூச்சியோ எதுவாக இருந்தாலும் ஆண் ஆத்தி என் ன கொடுக்கிறதோ அதைத்தான் தின்றாக வேண்டும்." (லட்சுமணன் – சப்பெகொகாலு – பக் -66) என்று கதை தொடங்கும்போது பறவைகளைப் பற்றிய கதையாக இருக்குமோ என்று சட்டென்று வாசகன் எண்ணி விடவும் கூடும். ஆனால் தொடர்ந்து கதைக்குள் நுழைகின்ற நிலையில் இருளர்களின் பேறுகாலப் பக்குவங்கள் விளக்கம் பெறுகின்றன.

ஒரு பெண் தாய்மை அடைந்த நிலையினை உறுதிப் படுத்தும்பொருட்டு வைத்தியக்காரி சில முறைகளைக் கையாளுதல், தாய்மையடைந்த பெண் சுமைகளைத் தூக்காதிருத்தல், அப்பெண் எலி போன்ற சிறு பிராணிகளையும் கொல்லாதிருத்தல், பறவைகளின் கருவாக விளங்கும் முட்டையினை உண்ணாதிருத்தல், அப்பெண்ணின் கணவன் கத்தி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தாதிருத்தல், குருவத்தி அப்பெண்ணை



GOVT. COLLEGE CHITTUR COLLEGE P.O. Palakkad, Kerala 678 104
Self attested
Dr Kavitha
PRINCIPAL GOVT. COLLEGE CHITTUR

82

சின்னமாரிக் காடை

லட்சுமணன் தன் கதைப் பனுவல்களில் ஒன்றாகிய சின்னமாரிக் காடையில் இருளர் இனத்தார் மனமொத்து வாழும் இல்லற வாழ்வையே விரும்புவர் என்பதைச் சுட்டியமைகின்றார். பெரியவர்கள் விருப்பமில்லாத இல்லற வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்தாலும் இளம்வயதினர் அவ்வாழ்வினை உதறித் தள்ளிவிட்டு தன் மனம் விழைந்த வாழ்க்கைத் துணையோடு வாழ ஆரம்பித்து விடுவர் என்பதை அக்கதையில் உணர்த்த விரும்பும் ஆசிரியர் அக்கருத்திற்கு இயைந்த தன்மையிலான இயற்கை நிகழ்வுகளை கதை சொல்லி வாயிலாகக் காட்டிச் செல்கின்றார்.

கதையில் வரும் ராசிக்கு வீட்டியனைப் பிடித்திருந்தது. அவனுக்கும் அவளைப் பிடித்திருந்தது. ஆனால் ராசியின் பெற்றோர் பர்மனிடம் பரியப் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவளை அவனோடு வாழுமாறு அனுப்பி வைத்தார்கள். அவள் அவனுக்கு ஒரு வாரிசையும் பெற்றுத் தந்தாள். எனினும் அவளுக்கு அவன் மீது ஈர்ப்பு ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை.

வீட்டியன் ராசியின் நினைவாகவே வேறு திருமணம் செய்யாமல் வாழ்ந்து கொண்டிருந்தான். வீட்டியனைப் பற்றி பர்மனிடம் ஏற்கனவே ராசி சொல்லியிருந்தாள். பர்மன் பெரிதாக அதை எடுத்துக் கொள்ளவில்லை. எவ்வாறோ பர்மனிடமிருந்து விலகி வந்த ராசி வீட்டியனை மீண்டும் தன் துணையாக ஏற்றுக் கொண்டாள். பர்மனும் பரியப் பணத்தோடு வேறு பெண்ணைத் திருமணம் செய்யத் தயாராகி விட்டான். இத்தகு நிகழ்வுகள் இருளர்களிடையே கலகக் குரலாக மாறி விரும்பத்தகாத பின் விளைவுகளை ஏற்படுத்துவதில்லை.

எப்பொழுதும் மழைத்துளிகள் விழுந்து கொண்டிருக்கும் குளிர்ந்த சோலையில் குளிர்ந்த காற்று மெல்ல வீசிக் கொண்டிருக்கும். ஆலமரத்தின் விழுதுகள் லேசாக அசைந்து கொண்டிருக்க "உய்யென்று தெற்கிலிருந்து வந்த சூறாவளி அதன் கிளைகளை ஆட்டிவிட்டுப் போனது. இரண்டு யானை அளவுக்கு வளர்ந்து நின்ற பால் கள்ளியில் சிட்டுகள் சத்தமிட்டுக் கொண்டிருந்தன."(லட்சுமணன், சப்பெகொகாலு, பக் – 240) என்று கதையினைத் தொடங்குவதன் மூலம் ஒன்றாக ஊர் சுற்றிக் கொண்டு இன்ப வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் இணைகளின் வாழ்வில் பெரியவர்கள் சூறாவளி போல நுழைந்து சலசலப்பை ஏற்படுத்தி விடுகிறார்கள் என்று உணர்த்தி விடுகிறார் ஆசிரியர். பிறகு காடைக் குருவிகளின் வாழ்வினைக் காட்சிப் படுத்துவதன் வழி ராசி, வீட்டியன், பர்மன் போன்றவர்களின் செயல் பாடுகளில் தவறு காண வழியில்லை என்பதைக் கூறாமல் கூறி விடுகின்றார் என்றும் உணர முடிகின்றது. கதையில் பின்வருமாறு காடைப் பறவையின் வாழ்வு சுட்டப் படுகின்றது.

"தரையோடு பறந்து வந்த ஆண்காடை குழியை நெருங்கி வந்து பெட்டையின் முகத்தைத் தனது அலகால் கோதி விட்டு எழுப்பியது. அது சிறகை படபடத்து விட்டு எழுந்தது. முட்டைகள் இரண்டும் ஒவ்வொரு திசையில் பிரிந்து கிடந்தன. இப்போது ஆண்காடையும் கத்தத் தொடங்கியது.

வெளியே வந்த பொண்டு , சுற்றும் முற்றும் பார்த்து பூச்சியை பொறுக்கியது. அதன் முகத்தில் கடமை முடிந்து விட்ட பெருமை இருந்தது. ஆண், குழிக்குள் இறங்கியது. அருகில் போட்டிருந்த புல்லை இழுத்து முட்டைக்குக் கீழே போட்டு அடிப்பரப்பை இன்னும் மெதுமெதுப்பாக்கி உட்கார்ந்து அடைகாக்க ஆரம்பித்தது.

கொஞ்சநேரம் நேரம் அங்கேயே சுத்தி கிடந்த பெட்டை மெல்ல நடந்து , பின் குடுகுடுவென ஓடி ...பறந்து... ஓடி... புளியமரத்துக்குக் கீழே இருந்த வேறு ஒரு ஆண்காடையோடு நடக்க ஆரம்பித்தது."(லட்சுமணன் , சப்பெகொகாலு , பக் – 240) என்று காடைகளின் வாழ்வை அழகியல் நிலையில் எடுத்துரைத்த லட்சுமணன் இருளர் இன மக்களின் மேற்கண்ட வாழ்வியல் நிலைகளை யும் புலப்படுத்துகின்றார் என்பது பெறப்படுகின்றது.

இலக்கியம் என்பது இன்புறுத்தலுக்காக அழகியலை உள்வாங்கி அதன் வழி அறிவுறுத்தலையும் மேற்கொள்கின்றது என்று ஆய்வறிஞர்கள் கூறுவதற்கேற்றவாறு மேற்கண்ட கதைகள் அமைந்திருக்கின்றன என்பது தெளிவு.

Self attested
3/11/23
Dr. Kavitha T

REJI T
2024.05.02
14:28:53
+05'30'



83